# කාර්යසාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# Performance Report

# 2016

## කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුව

## முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்

## DEPARTMENT OF MANAGEMENT AUDIT

මුදල් අමාත්‍යාංශය
මහලේකම් කාර්යාලය
කොළඹ 01.

நிதி அமைச்சு,
செயலகம்
கொழும்பு 01.

Ministry of Finance
The Secretariat
Colombo 01.

அரசநிதிச் சுற்றறிக்கை இலக்கம் 402 இல் தரப்பட்டுள்ளஅறிவுறுத்தல்களுக்குஏற்ப, இலங்கைப் பாராளுமன்றத்திற்குசமர்ப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

**முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்**

**நிதிஅமைச்சு,**

**செயலகம்**

**கொழும்பு 01.**

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | திணைக்களத்தின் நோக்கு,செயற்பணி,குறிக்கோள் மற்றும் பணிகள் | 01 |
| 1.1 | நோக்கு | 01 |
| 1.2 | செயற்பணி | 01 |
| 1.3 | குறிக்கோள் | 01 |
| 1.4 | பணிகள் | 02 |
| 02. | நிதிநிருவாகம் | 03 |
| 03. | பௌதீகசெயலாற்றுகை | 04 |
| 3.1 | உள்ளகக் கணக்காய்வுஅலுவலர்களின் ஆற்றலைவிருத்திசெய்தல் | 04 |
| 3.2 | முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக்களுக்கானதிறைசேரியின் பிரதிநிதித்துவத்தின் மூலம் அரசதுறையின் உள்ளகக் கணக்காய்வினைபலப்படுத்தல் | 05 |
| 3.3 | நிதிஅமைச்சினதும் திறைசேரித் திணைக்களங்களினதும் முகாமைத்துவகணக்காய்வுப் பணிகள் | 05 |
| 3.4 | அபிவிருத்திக் கருத்திட்டங்களில் முகாமைத்துவக் கணக்காய்வைவலுவூட்டுதல் | 06 |
| 3.5 | விசேடவிசாரணைமற்றும் கணக்காய்வுப் பணிகள் | 06 |
| 3.6 | அரசகணக்குகள் பற்றியசெயற்குழுவுக்குபொதுத் திறைசேரியின் அறிக்கையைசமர்ப்பித்தல் | 09 |
| 04. | மனிதவளமுகாமைத்துவம் மற்றும் பொதுநிருவாகம் | 10 |
| 4.1 | திணைக்களத்தின் அமைப்புரீதியானகட்டமைப்பு | 10 |
| 4.2 | 2016.12.31 ஆம் திகதியில் பணியாட்கள் | 11 |
| 4.3 | 2016 ஆம் ஆண்டில் பயிற்சிமற்றும் திறன்விருத்திநடவடிக்கைகள் | 13 |
| 4.3.1 | 2016 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பயிற்சிகள் | 13 |
| 4.3.2 | 2016 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் பயிற்சிகள் | 14 |
| 4.3.3 | செயலாற்றுகைமேம்பாட்டுநிகழ்ச்சித் திட்டம் | 15 |

# 01. திணைக்களத்தின், நோக்கு, செயற்பணி, குறிக்கோள் மற்றும் பணிகள்

## 1.1 நோக்கு

அதி உயர் செயலாற்றுகையையும் பொறுப்பையும் கொண்ட அரச சேவையொன்றின் பொருட்டு பெறுமதியைச் சேர்க்கின்ற மிகச் சிறந்த முகாமைத்துவ கணக்காய்வுப் பங்குதாரர் நிலையை அடைதல்

## 1.2 செயற்பணி

முகாமைத்துவக் கணக்காய்வினூடாக அரச சேவையின் பொறுப்புக்களை விருத்தி செய்வதற்கும் பெறுமதியைச் சேர்ப்பதற்கும் சுயாதீனமாக நோக்கத்தை அடைந்துகொள்வதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆலோசனை ரீதியான சேவைகளை வழங்குதல்.

## 1.3 குறிக்கோள்

1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்தல்.

2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் மூலம் உள்ளகக் கணக்காய்விற்கு வலுவூட்டல்.

3. முகாமைத்துவ கணக்காய்வுப் பணிகளை விருத்தி செய்யும் பொருட்டு தேவையான வழிகாட்டல்களை அறிமுகப்படுத்துதல்.

4. நிதி அமைச்சு மற்றும் பொது திறைசேரித் திணைக்களங்களின் முகாமைத்துவக் கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் உயர் முகாமைத்துவத்திற்கு ஒத்துழைத்தல்.

5. அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முகாமைத்துவ கணக்காய்வு செயற்பாடுகளுக்கு வலுவூட்டல்.

6. விசேட விசாரணைப் பணிகள் மூலம் அரச துறையில் ஏற்படுகின்ற மற்றும் ஏற்படக் கூடிய மோசடிகளை கண்டுபிடித்தல் மற்றும் அவ்வாறான நிலைகள், சம்பவங்களைத் தடுப்பதற்கான சிபாரிசுகள் மற்றும் நிவாரணத் திட்டங்களை பரிந்துரை செய்தல்.

## 1.4 பணிகள்

2008.01.25 ஆம் திகதிய 08/0200/306/012 ஆம் இலக்கத்தைக் கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம் திறைசேரியின் திணைக்களமொன்றாக 2008.02.01 ஆம் திகதியன்று தாபிக்கப்பட்டது. பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர் களுக்கும் கிடைக்கும் உதவிகளை தொடர்ந்தும் பலப்படுத்துவது அதன் நோக்கமாகவுள்ள அதேவேளையில், அதன் பிரகாரம் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள திணைக்களங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளுக்கு வழிகாட்டுவதும் அதன் மூலம் அந்த நடவடிக்கைகளை பலப்படுத்துவதும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள்

1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வின் தரத்தையும் செயற்திறனையும் மேம்படுத்துவதற்கான அடிப்படை நிறுவனமாகத் தொழிற்படுதல்.

2. நிதி அமைச்சு, திறைசேரித் திணைக்களங்கள் மற்றும் அதன் கீழுள்ள கருத்திட்டங்கள் தொடர்பான முகாமைத்துவ கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்ளல்.

3. உள்ளகக் கணக்காய்வுக்கான வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தல்.

4. உள்ளகக் கணக்காய்வு அலகுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.

5. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வாளர்களின் உள்ளகக் கணக்காய்வுத் திறன்களை விருத்தி செய்தல்.

6. நிதி அமைச்சில் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடாத்துதல், ஏனைய அமைச்சுக்களின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல் மற்றும் வழிகாட்டுதல்.

7. அரச துறைகள் பின்பற்றுகின்ற அபாய மதிப்பீட்டு முறைமையின் போதுமான தன்மையைக் கணிப்பிடுதல்.

8. விசேட விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

9. அரச கணக்குகள் பற்றிய செயற்குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளுதலும், பொதுத் திறைசேரியின் அறிக்கையை தயாரித்துச் சமர்ப்பித்தலும்.

# 02. நிதி நிருவாகம்

2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மூலம் செலவினத் தலைப்பு இலக்கம் 324, நிகழ்ச்சித் திட்ட இலக்கம் 01 மற்றும் கருத்திட்ட இலக்கம் 01 இன் கீழ் இந்தத் திணைக்களத்திற்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது 2016 ஆம் ஆண்டின் ஏற்பாடுகள் திருத்தப்பட்டுள்ளன. அந்த ஏற்பாடுகளை செலவு செய்த விதம் பற்றி கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| செலவின விபரம் | திருத்தப்பட்ட மதிப்பீடு (ரூபா) | மேலதிக ஒதுக்கீடு (ரூபா) | நி.ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல் (ரூபா) | உண்மைச் செலவினம் (ரூபா) | மீதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம் (அ)** | **34,500,000** | **8,040,000** | **-** | **41,324,556** | **1,215,444** |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 26,000,000 | 3,410,000 | 900,000<br>(900,000) | 28,671,839 | **738,161** |
| ஏனைய செலவினம் | 8,500,000 | 4,630,000 | 577,000<br>(577,000) | 12,652,717 | **477,283** |
| **மூலதனச் செலவினம் (ஆ)** | **1,300,000** | **570,000** | | **1,681,166** | **188,834** |
| 2002 இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்களைப் பழுதுபார்த்தல் | 200,000 | - | - | 92,007 | 107,993 |
| 2102 தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 100,000 | 150,000 | - | 234,432 | 15,568 |
| 2103 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 500,000 | 150,000 | - | 630,320 | 19,680 |
| 2401 திறன் விருத்தி | 500,000 | 270,000 | - | 724,407 | 45,593 |
| **முழு மொத்தம் (அ)+ (ஆ)** | **35,800,000** | **8,610,000** | **-** | **43,005,722** | **1,404,278** |

## அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கு

2016 ஆம் ஆண்டுக்காக இந்தத் திணைக்களத்தின் அரசாங்க அலுவலர்களின் அங்கீகரிக்கப்பட்ட முற்பணம் பீ கணக்கின் விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| விபரம் | அனுமதிக்கப்பட்ட எல்லை (ரூ.) | உண்மைச் செலவினம் (ரூ.) |
|---|---|---|
| -உச்ச செலவின எல்லை | **2,200,000** | **2,180,210** |
| ஆகக் குறைந்த கிடைப்பனவு எல்லை | **1,250,000** | **2,218,210** |
| ஆகக் கூடிய வரவு மீதி எல்லை | **10,000,000** | **6,014,647** |

# 03. பௌதீக செயலாற்றுகை

## 3.1. உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் திறன்களை விருத்தி செய்தல்

உள்ளகக் கணக்காய்வின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக அமைச்சுக்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றில் பணியாற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்களின் தொழில்சார் அறிவினை மேம்படுத்துவதற்காகவும் கணக்காய்வு சம்பந்தமான காலத்திற்கேற்ற தகவல்களை வழங்குவதற்காகவும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களமானது தொடர்ச்சியாக அவர்களுக்கு ஒத்துழைத்து வருகின்றது. அந்த நோக்கத்திற்காக 2016 ஆம் ஆண்டில் இந்தத் திணைக்களத்தினால் பின்வரும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

| இடம்பெற்ற திகதி | செயலமர்வின் தலைப்பு | பங்குபற்றியோர் |
|---|---|---|
| 2016-06-28 | ஊக்குவிப்பு மற்றும் முகாமைத்தவ மேம்பாடு | அமைச்சுக்களின்/ மாவட்டச் செயலகங்களின் /திணைக்களங்களின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் |
| 2016-03-09 | அரசாங்கத்தின் பெறுகை நடவடிக்கை தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல் பற்றிய செயலமர்வு | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் |
| 2016-12-15 | அரசாங்கத் துறையில் பயன்பாட்டுக்கு எடுக்கப்படுகின்ற கணனி நிகழ்ச்சித் திட்டமாகிய CIGAS மற்றும் GOVERNMENT PAYROLL SYSTEM கணக்காய்வு பற்றிய பயிற்சிச் செயலமர்வு | அமைச்சுக்களின்/ மாவட்டச் செயலகங்களின் /திணைக்களங்களின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் |
| 2016-12-01,09,08,16,17<br>2016-11-10,15 | முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்துதல் | பிரதான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிலுள்ள சகல உத்தியோகத்தர்களும் |

## 3.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக்களுக்கான திறைசேரியின் பிரதிநிதித்துவத்தின் மூலம் அரச துறையின் உள்ளகக் கணக்காய்வை பலப்படுத்தல்

அரசாங்க அமைச்சுக்களின் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் கூட்டங்களுக்கு திறைசேரியின் பிரதிநிதிகளாக குழுவின் அங்கத்தவர் என்ற வகையில் இந்தத் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றுகின்றனர். அந்த அலுவலர்களினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை வினைத்திறனுடையதாக தொடர்ச்சியாக நடாத்துவது பற்றிய வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை பலப்படுத்துதல், உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் அரசாங்கத்தின் கணக்காய்வு விசாரணைகளின் மூலம் எடுத்துக் காட்டப்படுகின்ற விசேட விடயங்கள் சம்பந்தமான தீர்மானங்களை எடுப்பதற்கும் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் குழுவின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவது பற்றிய பின்னூட்டல்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் அரசாங்கத் துறையின் முகாமைத்துவ நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கு பங்களிப்பை வழங்கியுள்ளது.

சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டினுள் 50 அமைச்சுக்களில் நடாத்தப்பட்ட 207 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கும், 06 திணைக்களங்களில் நடாத்தப்பட்ட 34 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கும், இலங்கைப் பாராளுமன்றம், பாராளுமன்ற சபாநாயகரின் அலுவலகம், சனாதிபதி செயலகம், பிரதமரின் அலுவலகம், அரசாங்க சேவை ஆணைக்குழு, இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, தேசிய கல்வி ஆணைக்குழு, போன்ற அரசாங்க நிறுவனங்களில் 20 முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கும், இந்தத் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர். மேலும் நிதி அமைச்சுக்குரிய நிறுவனமாகிய இலங்கைக் காப்புறுதிச் சபையின் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கும், இந்தத் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர்.

## 3.3. நிதி அமைச்சு மற்றும் திறைசேரியின் திணைக்களங்களது முகாமைத்துவ கணக்காய்வுகள்

நிதி அமைச்சு மற்றும் திறைசேரித் திணைக்களங்கள் தொடர்பான முகாமைத்துவ கணக்காய்வை மேற்கொள்வது இந்தத் திணைக்களத்தின் முன்னணிப் பணியாகக் கருதப்படுகின்றது இந்தப் பணியானது, 2016 ஆம் ஆண்டிலும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில், அதன் பிரகாரம், பின்வரும் சகல திணைக்களங்களுக்காகவும் ஒரு காலாண்டுக்கு ஒரு முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வீதம் தலா 04 முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வீதம் வெளியிடப்பட்டுள்ளது. அதன் மூலம் அந்த நிறுவனங்களின் தலைவர்களுக்கு தமது திணைக்களங்களினுள் பயன்வாய்ந்த முறையில் வினைத்திறனாக உள்ளக நிருவாக முறைகளையும் அதேபோன்று சிறந்த செயலாற்றுகை ஒன்றை மேற்கொள்வதற்கு பேருதவி கிடைத்துள்ளது.

தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்
திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்
பொதுத் தொழில் முயற்சிகள் திணைக்களம்
சட்ட அலுவல்கள் திணைக்களம்

அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

அபிவிருத்தி நிதித் திணைக்களம்

வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்

அரச நிதித் திணைக்களம்.

அரச கணக்குகள் திணைக்களம்

முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்

தகவல் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவத் திணைக்களம்

முகாமைத்துவச் சேவைத் திணைக்களம்

நிதி அமைச்சுக்காக வழங்கப்பட்டுள்ள முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 2 ஆகும்.

### 3.4. அபிவிருத்திக் கருத்திட்டங்களில் முகாமைத்துவ கணக்காய்வை பலப்படுத்தல்

சகல அமைச்சுக்களின் கீழும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களிலும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்காக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 10 மில்லியன் டொலர்களுக்கு மேற்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக உள்ளகக் கணக்காய்வாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காக அறிவுரைச் சுற்றறிக்கையொன்றின் மூலம் வெளியிடுவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சம்பந்தமான கணக்காய்வினை மேற்கொண்டு 4 அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1. அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி அபிவிருத்திக் கருத்திட்டங்கள்
2. ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் தொகுதிக் கருத்திட்டம்
3. அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற களஞ்சிய முகாமைத்துவக் கருத்திட்டம்

## 3.5 விசேட விசாரணை மற்றும் கணக்காய்வுப் பணிகள்

நிதி அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் நிதி அமைச்சின் செயலாளருக்கும் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளை நிதி அமைச்சின் செயலாளரின் பணிப்பின் பேரில் பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றது. அவ்வாறு அனுப்பப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும் விசாரணை அறிக்கைகள் நிதி அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக குறித்த அமைச்சின் செயலாளருக்கு அல்லது குறித்த நிறுவனத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், முறைப்பாட்டின் விசாரணைகளின் மூலம் வெளியாகும் குறைபாடுகள் மற்றும் முறைகேடுகள் என்பன மீண்டும் ஏற்படாதவாறு தடுப்பதே இதன் நோக்கமாகும்.

2016 ஆம் ஆண்டில் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் 18 விசாரணை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ள அதேவேளையில் வருடத்தினுள் சமர்ப்பிக்கப்பட்ட 12 முறைப்பாடுகளுக்காக தொடர்ந்தும் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் 2016 ஆம் ஆண்டினுள் கிடைத்தவற்றில் 6 விசாரணைகள் முடிவுறுத்த வேண்டியிருக்கின்ற அதேவேளையில் 2016 ஆம் ஆண்டினுள் முடிவுறுத்தப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை 06 ஆகும்.

## 2016 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்டுள்ள விசாரணைகள்

| தொடர் இல. | நிறுவனம் | விசாரணை |
|---|---|---|
| 01 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | அரசாங்கத்தின் வருமானத்தைத் தடுத்து குறுக்கு வழிகளில் பணத்தைத் திரட்டும் அலுவலர்கள் சம்பந்தமான விசாரணை |
| 02 | திவிநெகும திணைக்களம் | சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நிதியத்திலிருந்து அறநெறிப் பாடசாலைச் சீருடை விநியோகம் சம்பந்தமான விசாரணை |
| 03 | விளையாட்டுத் துறை அமைச்சு | இலங்கை மல்யுத்தச் சங்கத்தின் நிதி முறைகேடுகள் சம்பந்தமான விசாரணை |
| 04 | லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் | லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தின் தற்போதைய நிலை சம்பந்தமான விசாரணை |
| 05 | மதுவரித் திணைக்களம் | திணைக்களத்தின் புதிய நிருவாகத்திற்கு எதிரான முறைப்பாடு சம்பந்தமான விசாரணை |
| 06 | மதுவரித் திணைக்களம் | கள்ளுச் சாராயத்திற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது முறையற்ற விதத்தில் செயற்பட்டமை மற்றும் மாதாந்த அனுமதிப் பத்திரத்திற்கான தவணைப் பணத்தை அறவிடாமை சம்பந்தமான விசாரணை |
| 07 | இலங்கை காப்புறுதிச் சபை | மோசடிகள் நடவடிக்கைகள் சம்பந்தமான விசாரணை |
| 08 | பேராதனை வைத்தியசாலை | நிதி ஒழுங்குவிதியை மீறியமை சம்பந்தமான விசாரணை |
| 09 | சுகாதார அமைச்சு | வைத்தியசாலையின் சுத்திகரிப்புச் சேவை சம்பந்தமான விசாரணை |
| 10 | கிழக்கு மாகாணம் - புரநெகும கருத்திட்டம் மட்டக்களப்பு | மாவட்ட கருத்திட்ட முகாமையாளரினால் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியமை சம்பந்தமான விசாரணை |
| 11 | ஜிம்கானா சங்கம் | மதுபான அனுமதிப் பத்திரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியமை சம்பந்தமான விசாரணை |
| 12 | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பாரிய சீரழிவு மற்றும் களவு சம்பந்தமான விசாரணை |
| 13 | இல. 05 தேவாலய ஒழுங்கை - கோட்டை | இல. 05 தேவாலய ஒழுங்கை - கோட்டை அத்தமீரிய நிர்மாணம் சம்பந்தமான விசாரணை |
| 14 | ஆவிசாவலை மக்கள் வங்கி | ஈடு வைக்கப்பட்ட தங்கத்தை மோசடியான முறையில் தொலைத்தமை சம்பந்தமான விசாரணை |
| 15 | புகையிரதத் திணைக்களம் | அரசாங்கத்தின் பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தியமை சம்பந்தமான விசாரணை |
| 16 | இலங்கை சுங்கத் திணைக்களம் | திணைக்களத்தின் பரிசுத் தொகையை செலுத்தாமை சம்பந்தமான விசாரணை |
| 17 | தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் | திணைக்களத்தின் தற்போதைய நிருவாகம் சம்பந்தமான விசாரணை |
| 18 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | அரசாங்க நிதியை வினைத்திறனின்றிச் செலவிட்டமை சம்பந்தமான விசாரணை |

## 2016 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்று தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற முடிவுறாத விசாரணை நடவடிக்கைகள்

இந்த விசாரணை நடவடிக்கைகளை 2016 ஆம் ஆண்டினுள் முடிவுறுத்த முடியாமற்போன போதிலும் அவற்றின் வேலைகள் இறுதிக் கட்டம் வரை முடிவுறுத்தப்பட்டுள்ளன.

| தொடர் இல. | நிறுவனம் | விசாரணை |
|---|---|---|
| 01 | லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி | லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் ஹம்பாந்தோட்டை கிளையில் இடம்பெற்றுள்ள நிதி மோசடி மற்றும் முறைகேடுகள் சம்பந்தமான விசாரணை |
| 02 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் இடம்பெறுகின்ற ஊழல் மற்றும் மோசடி சம்பந்தமான விசாரணை |
| 03 | மலையக புதிய கிராம உட்கட்டமைப்பு வசதிகள் சமூக அபிவிருத்தி அமைச்சு | சௌம்யமூர்த்தி தொண்டமான் மன்றத்தில் இடம்பெற்றுள்ள மோசடி சம்பந்தமான விசாரணை |
| 04 | தபால் திணைக்களம் - யாழ்ப்பாணம் | யாழ்ப்பாண தபால் அலுவலகத்திலுள்ள முறைகேடுகள் சம்பந்தமான விசாரணை |
| 05 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | விசாரணைப் பிரிவிலுள்ள சிரேட்ட உதவி ஆணையாளர் சம்பந்தமான விசாரணை |
| 06 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | செயலாளரின் ஊழல் மற்றும் மோசடி சம்பந்தமான விசாரணை |
| 07 | புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு | மோசடி நடவடிக்கைகள் சம்பந்தமான விசாரணை |
| 08 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | பொய்க் குற்றச்சாட்டின் அடிப்படையில் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்தமை மற்றும் பேருவலைக்க இடமாற்றம் செய்தமை சம்பந்தமான விசாரணை |
| 09 | கொழும்புத் துறைமுக நிர்மாணக் கருத்திட்டம் | கருத்திட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட இயந்திரங்களையும் வாகனங்களையும் போலியான முறையில் விற்பனை செய்தமை சம்பந்தமான விசாரணை |
| 10 | தபால் திணைக்களம் | நாட்டின் சகல தபால் பிரிவுகளிலும் உள்ள மோசடிகள் சம்பந்தமான விசாரணை |
| 11 | தபால் திணைக்களம் | மோசடியான முறையில் இடம்பெறுகின்ற அரசாங்க நிதியைக் கொள்ளையடித்தல் சம்பந்தமான விசாரணை |
| 12 | தேசிய விஞ்ஞான மன்றம் | அரசாங்கத்தின் பணத்தின் முறையற்ற பயன்பாடு சம்பந்தமான விசாரணை |

**2016 ஆம் ஆண்டினுள் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கின்ற விசாரணைகள்**

1. அரசாங்க உத்தியோகத்தர்களின் நலன்புரிச் சங்கத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம் சம்பந்தமானது.
2. அபிவிருத்தி லொத்தர் சபைக்கு புதிய பணியாளர்களின் ஆட்சேர்ப்பு
3. நுவரெலியா பொலிஸ் அதிகாரியின் அலுவலகத்தின் நடவடிக்கைகள்
4. தேசிய காப்பறுதி நிதியத்தின் நடவடிக்கைகள்
5. உத்தியோகபூர்வ வாகனம் உரித்தான உத்தியோகத்தர்கள் ஒதுக்கத்திலுள்ள வாகனங்களைப் பயன்படுத்துதல்
6. மோசடியான முறையில் ஓய்வூதியத்தைப் பெறுதல்.

**2016 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு நடவடிக்கைகள்**


| தொடர் இல. | விசேட கணக்காய்வு |
|---|---|
| 01 | அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் சம்பந்தமான விசாரணை |
| 02 | நிதி அமைச்சுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்கள் சம்பந்தமான விசாரணை |
| 03 | வாகன வாயு நம்பிக்கை நிதியம் சம்பந்தமான விசாரணை |
| 04 | 2016 வரவு செலவு முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம் சம்பந்தமான விசாரணை |
| 05 | நிதி அமைச்சின் 2015 ஆம் ஆண்டுக்கான பொருட் கணக்கெடுப்பு நடவடிக்கை மற்றும் அகற்றல் சம்பந்தமான விசாரணை |
| 06 | விளையாட்டுத் துறை அமைச்சினால் தனியார் கம்பனியொன்றில் நிதியை முதலீடு செய்தமை சம்பந்தமான விசாரணை |

## 3.6 அரச கணக்குகள் பற்றி செயற்குழுவுக்கு பொதுத் திறைசேரியின் அறிக்கையை சமர்ப்பித்தல்

அரச கணக்குகள் பற்றிய செயற்குழுவினால் அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், உள்ளுராட்சி நிறுவனங்கள் அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அந்தந்த நிறுவனங்களுக்குரிய பொதுத் திறைசேரியின் அறிக்கை அரச கணக்குகள் பற்றிய செயற்குழுவுக்கு சமர்ப்பிப்பதற்குமுகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டினுள் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை 77 ஆகும். இந்த செயற்குழுக் கூட்டங்களுக்கான இந்தத் திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் பங்களிப்பும் வழங்கப்பட்டுள்ளது.

## 04. மனிதவள முகாமைத்துவம் மற்றும் பொது நிருவாகம்

### 4.1. 2016.12.31 ஆம்திகதி திணைக்களத்தின் அமைப்புரீதியான கட்டமைப்பு




அ.ப.உ. – 4, சாரதி -3, ** - வெளிநாட்டு விடுமுறை, * - வெற்றிடம், .பொ.மு பி. உ - பிரதான முகாமைத்துவ உதவியாளர் அ.உ.- அபிவிருத்தி உத்தியொகத்தர் , பொ.மு.உ.- பொது முகாமைத்துவ உதவியாளர்

## 4.2. பதவியினர்

2016.12.31 ஆம் திகதியில் பதவியினர்

| பதவி | பதவியணி | | |
|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | உண்மையான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
| பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | - |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | - |
| பணிப்பாளர் (இ.நி.சே.) | 01 | 01 | - |
| பணிப்பாளர் (இ.க.சே.) | 05 | 05 | - |
| பணிப்பாளர் (இ.தி.சே.) | 02 | 02 | - |
| உதவிப்/ பிரதிப் பணிப்பாளர் (இ.க.சே.) | 07 | 06 | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் / அபிவிருத்தி உதவியாளர் | 09 | 06 | 03 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 14 | 12 | 02 |
| சாரதி | 07 | 03 | 04 |
| அலுவலகப் பணி உதவியாளர் | 06 | 04 | 02 |
| மொத்தம் | 53 | 41 | 12 |

### 2015 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று திணைக்களத்திற்கு வந்த அலுவலர்கள்

| தொடர் இல. | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | வந்த திகதி |
|---|---|---|---|
| 01 | திருமதி. ஜீ.ஜீ. பபசரா | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 2016.03.14 |
| 02 | திருமதி. ஆர்.பீ. கன்கேவல | பணிப்பாளர் - இ.நி.சே. | 2016.01.08 |
| 03 | திரு. டப்ளியு. விமலசேன | பணிப்பாளர் - இ.தி.சே. | 2016.12.19 |
| 04 | திரு. ஜீ. மெத்தெகொடகே | உதவிப் பணிப்பாளர் - இ.க.சே. | 2016.01.04 |
| 05 | திரு. டப்ளியு.எம்.டீ. விஜேபண்டார | உதவிப் பணிப்பாளர் - இ.க.சே. | 2016.01.04 |
| 06 | செல்வி. கே.பீ.ஜீ.யூ. காரியவசம் | உதவிப் பணிப்பாளர் - இ.க.சே. | 2016.01.05 |
| 07 | திருமதி.கே.ஏ.எம். கபுருபண்டார | உதவிப் பணிப்பாளர் - இ.க.சே. | 2016.01.12 |

| தொடர் இல. | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | வந்த திகதி |
|---|---|---|---|
| 08 | திருமதி. எம்.ஜீ.என்.எஸ். மீகஸ்முல்ல | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2016.01.02 |
| 09 | திரு. எஸ்.பீ.எம்.டீ. விஜேவர்தன | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2016.07.05 |
| 10 | திரு. ஜீ.ஏ.ரீ.கே. பெரேரா | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2016.04.08 |
| 11 | திருமதி.யூ.டீ.எஸ்.கே. அபேரத்ன | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2016.09.06 |
| 12 | திருமதி. டப்ளியு.கே.டீ.ஏ. வீரசிங்ஹ | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2016.09.06 |
| 13 | திரு. கே. அத்துகோரல | சாரதி | 2016.07.11 |
| 14 | திரு. கே.சீ.யூ. ஜயஷாந்த | அ.ப.உ | 2016.07.12 |

## 2015 ஆம் ஆண்டில் திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்கள்

| தொடர் இல. | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | சென்ற திகதி |
|---|---|---|---|
| 01 | திரு. ஜீ. மெத்தெகொடகே | உதவிப் பணிப்பாளர் - இ.க.சே. | 2016.05.23 |
| 02 | திருமதி.கே.ஏ.டீ.ஆர்.ரீ. கஹந்தவஆரச்சி | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2016.02.01 |
| 03 | திருமதி.டப்ளியு.டீ.எஸ்.கே. அலகியவன்ன | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2016.08.31 |
| 04 | திரு. டப்ளியு.ஜீ.டீ. சானக | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2016.09.02 |
| 05 | திருமதி. ஜீ.டீ.கே. லியனகே | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2016.09.02 |
| 06 | திருமதி. எச்.கே.சீ. பிரியதர்ஷனி | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2016.09.02 |
| 07 | திருமதி. டீ.எஸ்.பீ. விக்ரமரத்ன | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2016.04.05 |
| 08 | திரு. எச்.டீ.பீ. சரத்குமார | சாரதி | 2016.04.25 |
| 09 | திரு. டப்ளியூ.ஆர். ஜயந்த | சாரதி | 2016.01.12 |
| 10 | திரு. எஸ்.எம.ஆர்.பீ. குணசேகர | சாரதி | 2016.06.30 |
| 11 | திரு. பீ.ஜீ.டீ. பிரேமகுமார | சாரதி | 2016.02.18 |
| 12 | திரு. கே.டீ.என். பிரேமலால் | அ.ப.உ | 2016.07.05 |

## 4.3. 2016 ஆம் ஆண்டினுள் பயிற்சி மற்றும் திறன் விருத்தி நடவடிக்கைகள்

### 4.3.1. 2016 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்கள்

| அலுவலரின் பெயர் | பதவி | இடம்பெற்ற நாடு | பயிற்சி கற்கைநெறி | காலம் |
|---|---|---|---|---|
| **திருமதி. எஸ்.ஏ.சீ. குலதிலக** | பணிப்பாளர் நாயகம் | ஐக்கிய அமெரிக்கக் குடியரசு | Leadership Decision Making Optimizing Organizational Performance -Harvard Kennedy School | 21.02.2016 26.02.2016 |
| | | இந்தியா | Workshop on Internal Audit Functions in the Public Sector - Delhi | 05.09.2016 06.09.2016 |
| **திரு. ஆர்.ஆர்.கே. நுகபிட்டிய** | பணிப்பாளர் | மலேசியா | Managerial Competency Development Program | 17.04.2016 23.04.2016 (முதலாவது அமர்வு) |
| **திரு. எஸ்.எம். தயாரத்ன** | பணிப்பாளர் | மலேசியா | Managerial Competency Development Program | 17.04.2016 23.04.2016 (முதலாவது அமர்வு) |
| **திருமதி. எம்.ஏ.கே.பீ. விஜேவன்த** | பணிப்பாளர் | மலேசியா | Managerial Competency Development Program | 17.04.2016 23.04.2016 (முதலாவது அமர்வு) |
| **திரு. டப்ளியு.எம்.டீ. விஜேபண்டார** | உதவிப் பணிப்பாளர் | சீனா | Seminar on Cloud Computing, Big Data Network Construction and Developing Strategies for Developing Countries in 2016 | 24 .05.2016 12.06. 2016 |
| **திருமதி.ஜே.எச். பிரனாந்து** | உதவிப் பணிப்பாளர் | தாய்லாந்து | International Programme on Management (Audit) | 24.07.2016 31.07.2016 |
| **திரு. டீ.ஜீ.ஜீ.எஸ் தயானாத்** | உதவிப் பணிப்பாளர் | தாய்லாந்து | International Programme on Management (Audit) | 24.07.2016 31.07.2016 |
| **திரு. ஏ.என். ஹபுகல** | பணிப்பாளர் | ஹொங்கொங் | Executive Training Programme on Macroeconomic Policies at the University of Hong Kong | 01.08.2016 05.08.2016 |

| அலுவலரின் பெயர் | பதவி | இடம்பெற்ற நாடு | பயிற்சி கற்கைநெறி | காலம் |
|---|---|---|---|---|
| **திரு.எஸ்.கே. குசலகுமாரன்** | பணிப்பாளர் | இந்தியா | Workshop on Internal Audit Function in the Public Sector – Delhi | 05.09.2016 06.09.2016 |
| **திருமதி. ஆர்.பீ. கன்கேவல** | பணிப்பாளர் | மலேசியா | International Programme & Study Tour on Risk & Change Management | 23.10.2016 30.10.2016 |
| **திரு. டீ.ஜீ.ஜீ.எஸ் தயானாத்** | பணிப்பாளர் | மலேசியா | International Programme& Study Tour on Risk & Change Management | 23.10.2016 30.10.2016 |
| **திருமதி. பீ.ரீ.என். மாலி** | உதவிப் பணிப்பாளர் | மலேசியா | International Programme& Study Tour on Risk & Change Management | 23.10.2016 30.10.2016 |
| **திருமதி.கே.ஏ.எம். கபுருபண்டார** | உதவிப் பணிப்பாளர் | மலேசியா | International Programme& Study Tour on Risk & Change Management | 23.10.2016 30.10.2016 |

## 4.3.2. **2016 ஆம் ஆண்டினுள் உள்நாட்டு பயிற்சி வாய்ப்புகள்**

| பயிற்சி கற்கைநெறி / நிகழ்ச்சித் திட்டம் | பயிற்சிக் காலம் | அலுவலரின் பெயர் | பதவி |
|---|---|---|---|
| **Applied Econometric-Practical Approach Using E-views Software** | 09.02.2016 - 18.07.2016<br>செவ்வாய்க் கிழமை நாட்களில் காலையில் | திரு. டீ.ஜீ.ஜீ.எஸ் தயானாத் | பணிப்பாளர் |
| **Training Program on How to Minimize Audit Quires** | 2016.02.25/ 26 | திருமதி.கே.ஏ.எம். கபுருபண்டார | உதவிப் பணிப்பாளர் |
| **Managerial Competency Development Program (Second Session)** | 2016.05.05 முதல் 08 வரை | திரு. ஆர்.ஆர்.கே. நுகபிட்டிய<br>திரு. எஸ்.எம். தயாரத்ன<br>திருமதி. எம்.ஏ.கே.பீ. விஜேவன்த | பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர் |

| பயிற்சி கற்கைநெறி / நிகழ்ச்சித் திட்டம் | பயிற்சிக் காலம் | அலுவலரின் பெயர் | பதவி |
|---|---|---|---|
| **Two day Workshop on Salary Conversions** | 2016.05.12 மற்றும் 13 | திருமதி. கே.ஆர்.ஆர். பிரனாந்து | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| **அலுவலக உபகரணங்கள் பற்றிய நிருவாகம்** | 2016.05.26 மற்றும் 27 | திருமதி. ஈ.எம்.ஜீ.எல். ஏக்கநாயக்க<br>திரு. ஜே.பீ. முதலிகே | பொது முகாமைத்துவ உதவியாளர்<br>பொது முகாமைத்துவ உதவியாளர் |
| **Workshop on Attitude and Skills Development (XIII)** | 2016.06.24 | திருமதி. டப்ளியு.டீ.எஸ்.கே. அலகியவன்ன<br>திருமதி. எம்.டீ.எஸ்.எஸ் வீரசிங்ஹ | அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| **ஒழுக்காற்று நடவடிக்கைமுறைப் பயிற்சி** | 2016.08.24,25 மற்றும் 26 | திருமதி. எம்.டீ.எஸ்.எஸ் வீரசிங்ஹ<br>திரு. ஜே.பீ. முதலிகே | அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>பொது முகாமைத்துவ உதவியாளர் |
| **தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பொருட்களின் பெறுகை மற்றும் மதிப்பீடு பற்றிய செயலமர்வு** | 2016.08.30 மற்றும் 31 | திருமதி. ஜே.ஏ. சந்தியா<br>திரு. பீ.டப்ளியு.பி.எம். விமலசந்திர | பொது முகாமைத்துவ உதவியாளர்<br>பொது முகாமைத்துவ உதவியாளர் |
| **National Diploma in English Language** | சனிக் கிழமை நாட்களில் (4 மாதங்கள்) | திருமதி. டப்ளியு.ஜீ. மனோஜா வசந்தி | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| **On Internal Audit 2016** | 2016.11.09 | திரு. ஏ.என். ஹபுகல<br>திருமதி. பீ.ரீ.என். மாலி | பணிப்பாளர்<br>உதவிப் பணிப்பாளர் |

### 4.3.3 செயலாற்றுகை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தின் மொத்தப் பதவியினர்களினதும் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக “முகாமைத்துவக் கணக்காய்வின் அபாய முகாமைத்துவம்” சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று 2016.03.11 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது.